# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 74/ந/2026, நாள்: 08.07.2026

J. ரவி,
திருவத்திபுரம்,
திருவண்ணாமலை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
திருவத்திபுரம் நகராட்சி,
திருவண்ணாமலை மாவட்டம். – எதிர்மனுதாரர்

திருவண்ணாமலை மாவட்டம், திருவத்திபுரம், காந்திசாலை, எண்.230 என்கிற முகவரியில் வசிக்கும் திரு J. ரவி, என்பவரது 18.02.2026 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.02.2026 அன்று பெறப்பட்டு, 74/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவண்ணாமலை மாவட்டம், திருவத்திபுரம், காந்திசாலை, எண்.230 என்கிற முகவரியில் வசிக்கும் திரு J. ரவி, என்பவரின் 18.02.2026 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"திருவண்ணாமலை மாவட்டம், திருவத்திபுரம் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு 04.03.2025 மற்றும் 30.04.2025 ஆகிய நாளிட்ட கடிதங்கள் பதிவு தபால் கடிதங்கள் மூலம் ஏல அறிக்கை கோரி அனுப்பப்பட்டது. அதில் நான் ஒரு உடல் ஊனமுற்றவன் என்றும் எனக்கு தங்கள் நகராட்சியில் புதியதாக கட்டப்பட்ட அலுவலக முன்புற கடைகள் ஏலம் நடக்கும் போது எனக்கு ஒரு ஏல அறிக்கை கோரி, பதிவு தபால் அனுப்பியும் எனக்கு இதுநாள் வரை எந்த பதிலும் இல்லை. ஆனால் கடைகள் ஏலம் விடப்பட்டதாக அறிந்தேன். நான் ஒரு உடல் ஊனமுற்றவன் என சான்று அளித்தும், உடல் ஊனமுற்றோருக்கான கடைகள் ஒதுக்கீடு செய்ய அரசாணை நகல் அனுப்பியும், எனக்கு இதுவரை எந்த தகவலும் அளிக்கவில்லை. எனவே சம்பந்தப்பட்ட நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோருகின்றேன்."

2. மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 06.04.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருவத்திபுரம் நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. திருவத்திபுரம் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.436/2026/அ1 நாள் 17.04.2026–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார். அதில் –

“திருவத்திபுரம் நகராட்சிகுட்பட்ட அலுவலக முன்புற கடைகள் ஏல மற்றும் ஒப்பந்தபுள்ளி அறிவிக்கை 20.12.2025ந் தேதியில் தினசரி நாளிதழான தின செய்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. இந்நகராட்சியின் மாற்றுத்திறனாளி நியமன உறுப்பினர் திரு.G.விஜயகுமார், திருவத்திபுரம் அவர்களிடம் ஏல அறிவிக்கை வழங்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளி நலச்சங்க உறுப்பினரிடம் ஏல அறிக்கை வழங்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சியின் அறிவிப்பு பலகையில் ஏல அறிவிக்கை ஒட்டி விளம்பரம் செய்யப்பட்டது.

மேற்படி மனுதாரர் 04.03.2025ம் தேதிய கோரிக்கை மனுவில் தனிப்பட்ட முறையில் அன்னாருக்கு ஏல அறிவிப்பு அனுப்ப கோரியுள்ளார். மேலும் மனுதாரர் நகராட்சி பணியில் பணி புரிந்து ஒய்வு பெற்று பண பயன் பெற்று வருகிறார். தனிப்பட்ட முறையில் மாற்று திறனாளி ஒருவருக்கு மட்டும் ஏல அறிவிப்பு வழங்க வழிவகை இல்லை. பொது மக்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. தொடர்புடைய மனுதாரர் ஏல அறிவிக்கை தொடர்பான அறிவிப்புகளை அறிந்திருந்தும் உரிய வைப்புதொகை செலுத்தி பொது ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. ” என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான திருவத்திபுரம் நகராட்சி ஆணையர் ஆகியோரை 22.05.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.04.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 22.05.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“நான் ஒரு மாற்றுத்திறனாளி என்பதால், அரசாணை மற்றும் விதிகளின்படி திருவத்திபுரம் நகராட்சி அலுவலக முன்புறம் கட்டப்படும் வணிக வளாக கட்டிடம் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை வெளியிடும்போது ஏல அறிவிக்கை எனக்கும் அனுப்பி வைக்குமாறு பதிவு தபால் மூலம் திருவத்திபுரம் ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

உள்ளூர் அரசு அலுவலகங்களுக்கு, உள்ளூர் தபால் பதிவேடு மூலம் ஏல அறிக்கை அனுப்பப்பட்டு அந்த கடிதத்திற்கான ஒப்புகை ரசீது பெறப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அப்படி நிகழ்வு நடந்ததாக தெரியவில்லை.

ஆனால் எனக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி அறிக்கை வெளியிடுவது தொடர்பான ஏல அறிவிக்கை எனக்கு இதுவரைக்கும் தெரியப்படுத்தவில்லை. நகராட்சி அலுவலகத்திலும் தகவல் பலகையில் அறிவிக்கை ஒட்டப்படவில்லை.

எனவே, மாற்றுத்திறனாளி எனக்கு ஏல அறிவிக்கை மற்றும் ஒப்பந்தபுள்ளி தொடர்பாக எந்த ஒரு தகவலும் தெரியப்படுத்தாத நகராட்சி அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.” .

6. எதிர்மனுதாரரான திருவத்திபுரம் நகராட்சி ஆணையரின் செயல்முறை ஆணை எண். ந.க.எண்.436/2026/அ1, நாள் 21.05.2026–ல் 22.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு நகராட்சி மேலாளர் திரு. ப. நாராயணசாமி மற்றும் நகராட்சி வருவாய் ஆய்வாளர் திருமதி. E.ரதிதேவி ஆகியோர் ஆஜராக உத்திரவிடப்பட்டதைத் தொடர்ந்து 22.05.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நகராட்சி மேலாளர் திரு. ப. நாராயணசாமி மற்றும் நகராட்சி வருவாய் ஆய்வாளர் திருமதி. E.ரதிதேவி ஆகியோர் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவுசெய்துள்ளனர்.

“திருவத்திபுரம் நகராட்சி அலுவலக முன்புற கடைகளுக்கான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை 20.12.2025 அன்று தினசெய்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. இவ்வறிவிக்கை நகராட்சி மாற்றுத்திறனாளி நியமன உறுப்பினரிடமும், மாற்றுத்திறனாளி நலச்சங்க உறுப்பினரிடமும் வழங்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி அறிவிப்பு பலகையில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் தினசரி தமிழ் நாளிதழில் விளம்பரப்படுத்தப்பட்டும், நகராட்சி அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டும், மாற்றுத்திறனாளி நியமன உறுப்பினரிடமும், மாற்றுத்திறனாளி நலச்சங்க உறுப்பினர் திரு.விஜயகுமார் என்பவரிடமும் ஏல அறிவிக்கை வழங்கப்பட்டது. மேலும் உள்ளூர் தொலைக்காட்சியிலும் மேற்கண்ட ஏல அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக 19.12.2025 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டு, 31.12.2025 அன்று பொது ஏலம் விடப்பட்டது. மாற்றுத்திறனாளிகளுக்கான ஏலம் 12.01.2026 அன்று ஏல அறிவிக்கை வெளியிடப்பட்டு 13.01.2026 அன்று நடைபெற்ற ஏலத்தில் மனுதாரர் கலந்து கொள்ளவில்லை. மேற்படி ஏலத்தில் கலந்து கொண்ட மாற்றுத்தினாளி ஒருவருக்கு ஏலம் விடப்பட்டு கடை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறோம். ”.

8. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான திருவத்திபுரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான திருவத்திபுரம் நகராட்சி மேலாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

திருவத்திபுரம் நகராட்சி அலுவலகம் முன்புறம் கட்டப்பட்டுள்ள நகராட்சி வணிக வளாக கடைகளுக்கான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை வெளியிடும்போது மாற்றுத்திறனாளியாகிய தனக்கு ஏல அறிவிக்கை அனுப்பி வைத்திடுமாறு திருவத்திபுரம் ஆணையரை மனுதாரர் கேட்டுக்கொண்டுள்ளார் என்பதும், ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி அறிவிக்கை வெளியிடுவது தொடர்பான ஏல அறிவிக்கை தனக்கு தெரியப்படுத்தவில்லை என்பதும், நகராட்சி அலுவலக தகவல் பலகையில் அறிவிக்கை ஒட்டப்படவில்லை என்பதும், உள்ளூர் அரசு அலுவலகங்களுக்கு ஏல அறிவிக்கை அனுப்பப்பட்டு ஒப்புகை ரசீது பெறப்பட்டதாக தெரியவில்லை என்பதும், ஏல அறிவிக்கை மற்றும் ஒப்பந்தபுள்ளி தொடர்பாக எந்த ஒரு தகவலும் தனக்கு அளிக்காத நகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திட மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார் என்பதும் மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

திருவத்திபுரம் நகராட்சி அலுவலக முன்புறத்தில் கட்டப்பட்டுள்ள கடைகளுக்கான ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி அறிவிக்கை பொது மக்கள் அனைவரும் அறியும் வகையில் நகராட்சி அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டு, தினசரி நாளிதழ், உள்ளூர் தொலைக்காட்சி ஆகியவற்றில் விளம்பரம் செய்யப்பட்டு, திருவத்திபுரம் நகராட்சி மாற்றுத்திறனாளி நியமன உறுப்பினர் மற்றும் மாற்றுத்திறனாளி நலச்சங்க உறுப்பினர் ஆகியோரிடம் ஏல அறிவிக்கை வழங்கப்பட்டுள்ளது என்பதும், மனுதாரர் திருவத்திபுரம் நகராட்சியில் பணி புரிந்து ஓய்வு பெற்றுள்ளார் என்பதும், தனிப்பட்ட முறையில் ஒருவருக்கு ஏல அறிவிப்பு வழங்குவது ஏற்புடையதல்ல என்பதும், மாற்றுத்திறனாளிகளுக்கான கடை ஒதுக்கீடு செய்வது தொடர்பாக 12.01.2026 அன்று ஏல அறிவிக்கை வெளியிடப்பட்டு 13.01.2026 அன்று ஏலம் விடப்பட்டுள்ளது என்பதும், ஏல அறிவிக்கை தொடர்பான விவரங்களை மனுதாரர் அறிந்திருந்தும், ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை என்பதும், மேற்படி ஏலத்தில் கலந்து கொண்ட மாற்றுத்திறனாளி ஒருவருக்கு கடை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதும் எதிர்மனுதாரரான நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் ஆணையரின் சார்பில் ஆஜரான நகராட்சி மேலாளர் மற்றும் நகராட்சி வருவாய் ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

இந்நேர்வில், திருவத்திபுரம் நகராட்சி அலுவலக முன்புறத்தில் கட்டப்பட்டுள்ள கடைகளுக்கான ஏலம் தொடர்பான ஏல அறிவிக்கை நகராட்சி அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டு, தினசரி நாளிதழ், உள்ளூர் தொலைக்காட்சி ஆகியவற்றில் விளம்பரம் செய்யப்பட்டு, திருவத்திபுரம் நகராட்சி மாற்றுத்திறனாளி நியமன உறுப்பினர் மற்றும் மாற்றுத்திறனாளி நலச்சங்க உறுப்பினர் ஆகியோரிடம் வழங்கப்பட்டு நடத்தப்பட்ட ஏலத்தில் கலந்து கொண்ட மாற்றுத்திறனாளி ஒருவருக்கு அரசாணையின்படி கடை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரரான திருவத்திபுரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி மேலாளர் மற்றும் நகராட்சி வருவாய் ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலங்களில் தெரிவித்திருந்தாலும், மாற்றுதிறனாளியான மனுதாரர் தனக்கும் ஏல அறிவிக்கை வழங்குமாறு கேட்டுக் கொண்டதை கருத்திற்கொண்டு, அவருக்கும் ஏல அறிவிக்கை அளித்திருக்கலாம் என்றும், இனிவரும் காலங்களில் விளிம்பு நிலை (Marginalized people) மற்றும் பாதிக்கப்படக்கூடிய (Vulnerable people) மக்களின் கோரிக்கைகளை அரசு விதிமுறைகளுக்குட்பட்டு, கருணையோடு பரிசீலித்திடலாம் என்றும் இம்முறைமன்றம் கருதுகிறது.

மேலும், ஏலத்தில் கலந்து கொண்ட மாற்றுத்தினாளி ஒருவருக்கு அரசாணையின்படி கடை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரரின் மனுமீது இம்முறைமன்ற நடுவத்தால் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, ஜூலை திங்கள் 8–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. J. ரவி,
   எண். 230, காந்தி சாலை,
   திருவத்திபுரம் – 604 407,
   திருவண்ணாமலை மாவட்டம்,
2. நகராட்சி ஆணையர்,
   திருவத்திபுரம் நகராட்சி,
   திருவண்ணாமலை மாவட்டம்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

10/7/26
செயலாளர்.